بِسۡمِ اللّٰهِ الرَّحۡمٰنِ الرَّحِيۡمِ

**ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத் தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் 29/12/2023 அன்று U.K - இஸ்லாமாபாதிலுள்ள முபாரக் பள்ளிவாசலில் ஆற்றிய ஜுமுஆ பேருரையின் சுருக்கம்**

✪ **உஹுது போரில் பெருமானார் (ஸல்) அவர்கள் தன்னந்தனியாக ஆகிவிட்டார்கள். அன்னாரின் வீரம் வெளிப்பட வேண்டும் என்பதே அதில் இருந்த இரகசியமாகும்.**

*(ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது அலை.....,)*

✪ **உஹுது போரின் சூழ்நிலைகள் மற்றும் சம்பவங்கள் ஆகியவற்றைப் பற்றிய குறிப்பு**

أَشْهَدُ أَنْ لَّآ إِلٰهَ إِلَّا اللّٰهُ وَحْدَهٗ لَا شَرِيْكَ لَهٗ وَأَشْهَدُ أَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ۔ أَمَّا بَعْدُ فَأَعُوْذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيْمِ۔

بِسۡمِ اللّٰہِ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ ۝ اَلۡحَمۡدُ لِلّٰہِ رَبِّ الۡعٰلَمِیۡنَ ۝ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ ۝ مٰلِکِ یَوۡمِ الدِّیۡنِ ۝

اِیَّاکَ نَعۡبُدُ وَ اِیَّاکَ نَسۡتَعِیۡنُ ۝ اِہۡدِنَا الصِّرَاطَ الۡمُسۡتَقِیۡمَ ۝ صِرَاطَ الَّذِیۡنَ اَنۡعَمۡتَ عَلَیۡہِمۡ ۬ۙ غَیۡرِ الۡمَغۡضُوۡبِ عَلَیۡہِمۡ وَ لَا الضَّآلِّیۡنَ ۝

இன்றும் உஹுது போர் குறித்து மேற்கொண்டு சில விபரங்களை எடுத்துக் கூறுவேன். ஏற்கனவே கூறப்பட்டது போன்று, மலைக்குன்றை காலி செய்ததன் காரணமாக காஃபிர்கள் பின்புறமிருந்து தாக்குதல் தொடுத்து விட்டார்கள்; போர்க்களத்தின் நிலை மாறிவிட்டது. எதிரிகளுடைய தாக்குதல் மிகவும் அச்சுறுத்தும் விதமாக இருந்தது. அப்போது பெருமானார் (ஸல்) அவர்களின் உறுதிப்பாடு, துணிவு, வீரம் ஆகியவற்றின் முன்மாதிரி எவ்வாறானதாக இருந்தது என்பதைப் பற்றி இவ்வாறு எழுதப்பட்டுள்ளது: போர்க்களத்தின் நிலை மாறிய போது சஹாபிகள் உணர்ச்சியற்ற நிலையில் தம்மைத் தேற்றிக்கொள்ள இயலவில்லை; குழப்பத்தில் சிக்கி விட்டனர். அப்போது பெருமானார் (ஸல்) அவர்கள் இந்த குழப்பமான சூழ்நிலையில் நாலாபுறமும் எதிரிகளின் பெருந்திரள் இருந்த போதிலும் தம் இடத்தில் உறுதியாக நின்றார்கள். சஹாபிகள் பதற்றத்தில் இங்குமங்கும் ஓடிக்கொண்டிருப்பதைக் கண்டு அவர்களை அழைத்தவாறு, இன்ன நபரே! என் பக்கம் வாருங்கள்; இன்ன நபரே! என் பக்கம் வாருங்கள். நான் இறைவனுடைய தூதராவேன் என்று கூறிக் கொண்டிருந்தார்கள். அப்போது எல்லா புறமிருந்தும் அன்னார் மீது அம்புகள் எறியப்பட்டுக் கொண்டிருந்தன.

ஓர் அறிவிப்பில் இவ்வாறு வருகிறது. பெருமானார் (ஸல்) அவர்கள் உரத்த குரலில்,

أَنَا النَّبِيُّ لَا كَذِبْ أَنَا ابْنُ عَبْدِ الْمُطَّلِبْ أَنَا ابْنُ الْعَوَاتِكْ

நான் நபியாவேன். இதில் பொய் ஒன்றும் இல்லை! நான் அப்துல் முத்தலிப் உடைய பேரனாவேன்! நான் அவாதிக் உடைய பேரனாவேன் என்று கூறிக் கொண்டிருந்தார்கள்.

இச்சொற்களை பெருமானார் (ஸல்) அவர்கள் ஹுனைன் போரில் கூறியதாக பொதுவான அறிவிப்புகளில் காணப்படுகின்றது. இதே சொற்களை அன்னார் உஹுது போரிலும் கூறியிருக்க சாத்தியமுள்ளது. அன்னார் கூறிய சொற்களில்

அவாதிக் என்று வந்தது. இது ஆதிக்கா என்ற சொல்லின் பன்மையாகும். ஆதிக்கா எனும் பெயருடைய ஒன்றுக்கும் மேற்பட்ட பெண்கள் இருந்தார்கள். அவர்கள் பெருமானார் (ஸல்) அவர்களுடைய தாய் வழி பாட்டிகள் மற்றும் தந்தை வழி பாட்டிகள் ஆவார்கள்.

**இச்சம்பவத்தின் விளக்கத்தை எடுத்துரைத்தவாறு ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மது சாஹிப் (ரலி) அவர்கள் சீரத் காத்தமுன் நபிய்யீனில் இவ்வாறு எழுதுகிறார்கள்:** அப்துல்லாஹ் பின் ஜுபைர் (ரலி) அவர்களுடன் இருந்தவர்கள் வெற்றி கிடைத்து விட்டது என்பதைக் கண்டபோது அவர்கள் தம்முடைய அமீர் அப்துல்லாஹ் பின் ஜுபைர் (ரலி) அவர்களிடம், நாங்களும் படையுடன் இணைந்து கொள்வதற்குத் தாங்கள் எங்களுக்கு அனுமதி தாருங்கள் என்று கேட்டனர். ஆனால் அப்துல்லாஹ் அவர்களோ அம்மக்களைத் தடுத்தார்கள். ஆனால் அவர்களோ, முழுமையான நிம்மதி கிடைக்காதவரை மலைக் குன்றை விட்டு விட வேண்டாம் என்பதே பெருமானார் (ஸல்) அவர்கள் கூறியதன் கருத்தாகும் என்று கூறியவாறே கீழே இறங்கிச் சென்று விட்டனர். காலித் பின் வலீது அவர்கள் மலைக்குன்று காலியாக இருப்பதைக் கண்ட போது அவர்கள் தம்முடைய சவாரிகளையும், இக்ரிமா பின் அபூஜஹ்ல் அவர்களையும் படைக் குழுவையும் உடன் அழைத்துக் கொண்டு வேகமாக அங்கு சென்றடைந்தார்கள். ஒரு நொடிப் பொழுதில் அப்துல்லாஹ் பின் ஜுபைர் (ரலி) மற்றும் அவர்களின் தோழர்களை ஷஹீதாக்கி, இஸ்லாமிய படைக்குப் பின்புறம் திடீரெனத் தாக்குதல் நடத்தி விட்டார்கள். அப்போது பெருமானார் (ஸல்) அவர்கள் ஓர் உயர்வான இடத்தில் நின்று கொண்டு இந்த அனைத்துக் காட்சிகளையும் பார்த்துக் கொண்டிருந்தார்கள். குரலுக்கு மேல் குரல் கொடுத்து முஸ்லிம்களை அழைத்துக் கொண்டிருந்தார்கள். ஆனால் அந்தக் கூச்சல் குழப்பத்தில் பெருமானார் (ஸல்) அவர்களின் குரல் அமுங்கிப் போய் கொண்டிருந்தது.

இந்தத் திடீர்த் தாக்குதலால் முஸ்லிம்கள் நிலை தடுமாறி விட்டார்கள். எந்த அளவுக்கு என்றால் இந்த உணர்ச்சியற்ற நிலையில் சில முஸ்லிம்கள் ஒருவர் மற்றவரின் மீது தாக்குதல் தொடுக்க ஆரம்பித்து விட்டார்கள். தம் மக்களுக்கும் அந்நியர்களுக்கும் வேறுபாடு இல்லாமல் போய்விட்டது. ஹுஃதைஃபா (ரலி) அவர்களின் தந்தை யமான் அவர்களை, தவறுதலாக முஸ்லிம்கள் ஷஹீதும் ஆக்கிவிட்டார்கள். பெருமானார் (ஸல்) அவர்கள் பிறகு முஸ்லிம்களின் சார்பாக யமான் அவர்களுடைய இரத்த இழப்பீட்டிற்குரிய தொகையை செலுத்த விரும்பினார்கள். ஆனால் ஹுதைஃபா (ரலி) அவர்களோ அதை வாங்க மறுத்து விட்டார்கள்; என்னுடைய தந்தை கொல்லப்பட்டதற்காக நான் முஸ்லிம்களை மன்னித்து விடுகிறேன் என்று கூறிவிட்டார்கள்.

**ஹஸ்ரத் இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்கள் சூரா அந்நூருடைய 64 ஆம் வசனத்திற்கு விளக்கவுரையளிக்கும்போது இச்சம்பவத்தைக் குறிப்பிட்டவாறு கூறுகிறார்கள்:** அந்த வசனத்தின் பொருள் என்னவென்றால், **'**இத்தூதருடைய கட்டளைக்கு மாற்றம் செய்பவர்கள் இறைவனிடமிருந்து ஏதேனும் துன்பம் தங்களுக்கு நேர்ந்துவிடுமோ என்றோ அல்லது துன்புறுத்தும் தண்டனை தங்களுக்கு வந்து விடுமோ என்றோ அஞ்ச வேண்டும்.**'**

**அன்னார் கூறுகிறார்கள்:** உஹுது போரில் கட்டளைக்கு மாறு செய்ததன் காரணமாகவே இஸ்லாமிய படைக்கு எந்த அளவு நஷ்டம் ஏற்பட்டது எனப்

பாருங்கள்! காஃபிர்கள் மீது வெற்றி கிடைத்த பிறகு இஸ்லாமிய படைக்கு ஒரு தற்காலிக சேதம் ஏன் ஏற்பட்டது என்றால், சில நபர்கள் பெருமானார் (ஸல்) அவர்களின் கட்டளைக்கு மாறு செய்தார்கள். அன்னாருடைய வழிகாட்டலுக்கு எதிராக தம் முயற்சியைக் கொண்டு செயல்பட ஆரம்பித்து விட்டார்கள்.

இதயத்தின் இயக்கத்திற்குப் பின்னால் இதயத்துடிப்பு செல்வதைப் போல் அம்மக்கள் முஹம்மது ரசூலுல்லாஹ் (ஸல்) அவர்களுக்குப் பின்னால் சென்றிருந்தால், முஹம்மது ரசூலுல்லாஹ் (ஸல்) அவர்களுடைய கட்டளையின் விளைவாக முழு உலகிற்கும் தம் உயிரைத் தியாகம் செய்ய வேண்டியது வந்திருந்தாலும் அதுவும் கூட அற்பமானது என்று அம்மக்கள் புரிந்திருந்தால் அந்த நஷ்டம் ஏற்பட்டிருக்காது! அந்த மக்கள் சொந்த முயற்சியைக் கொண்டு செயல்பட்டவாறு அந்த மலைக் குன்றை விட்டு இறங்கியிருக்காவிட்டால், மீண்டும் தாக்குதல் நடத்த எதிரிக்கு சந்தர்ப்பமும் கிடைத்திருக்காது; ஹஸ்ரத் முஹம்மது ரசூலுல்லாஹ் (ஸல்) அவர்களுக்கும் அவர்களின் சஹாபிகளுக்கும் எவ்வித துன்பமும் நேர்ந்திருக்காது. 'நீங்கள் கட்டளைக்கு மாறு செய்தீர்கள்; ஆகவே அதன் விளைவாக நஷ்டம் அடைந்தீர்கள் என்று அல்லாஹ் கூறுகின்றான்.

**ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் சூரா கவ்ஸருக்கு விளக்கம் அளிக்கும்போதும் இந்த சம்பவத்தைப் பற்றி விளக்கமாக எடுத்துரைத்துள்ளார்கள். அன்னார் கூறுகிறார்கள்:**

பெருமானார் (ஸல்) அவர்களின் உறுதித்தன்மையை எடுத்துரைத்தவாறு மிக்தாத் பின் அம்ர் (ரலி) அவர்கள் உஹுது நாளைக் குறித்து கூறுகிறார்கள்: அல்லாஹ்வின் மீது ஆணையாக! முஷ்ரிக்கள் கொலை செய்தார்கள்; ஹஸ்ரத் ரசூலுல்லாஹ் (ஸல்) அவர்களுக்கு மிகுந்த காயத்தை ஏற்படுத்தினார்கள். அன்னாரை உண்மையுடன் அனுப்பி வைத்த அந்த இறைவன் மீது ஆணையாக! நன்றாக கேட்டுக் கொள்ளுங்கள்! பெருமானார் (ஸல்) அவர்கள் ஓர் அங்குலம் கூட பின்வாங்கவில்லை. எதிரிகளுக்கு எதிரே நின்று கொண்டிருந்தார்கள்.

ஓர் அறிவிப்பில் வருகிறது: பெருமானார் (ஸல்) அவர்கள் தம் இடத்தில் உறுதியாக நின்று கொண்டிருந்தார்கள். தொடர்ச்சியாக எதிரிகளை எதிர்கொண்டு வந்தார்கள். தமது வில் மூலமாக அவர்கள் மீது அம்புகளின் மழையைப் பொழிந்து கொண்டிருந்தார்கள். எந்த அளவுக்கு என்றால், அம்புகள் முடிந்து விட்டன. அந்த வில் -ஐ கதாதா பின் நுஃமான் (ரலி) அவர்கள் எடுத்துக் கொண்டார்கள். அந்த வில் எப்பொழுதும் அவர்களிடத்தில்தான் இருந்தது.

நாஃபிஃ பின் ஜுபைர் (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள்: இப்போரில் கலந்து கொண்ட முஹாஜிர்களில் ஒருவர் போரின் நிலைமை குறித்து விவரிப்பதை நான் கேட்டேன். அவர் கூறினார்: "அம்புகள் ஒவ்வொரு திசையிலிருந்தும் எறியப்பட்டன. ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் நடுவில் இருந்தார்கள். ஆனால், அவை நபியவர்களை விட்டு விலகிச் சென்றன. எதிரிகளில் ஒருவனான அப்துல்லாஹ் பின் ஷிஹாப் ஸுஹ்ரீ என்பவனைக் கண்டேன். "அல்லாஹ்வின் மீது ஆணையாக! (ஹஸ்ரத் முஹம்மது ஸல்...) அவர்கள் நம்மிடமிருந்து காப்பாற்றப்பட்டு விட்டார். நாங்கள் நான்கு நபர்கள் அவரைக் கொல்ல வேண்டும் என்ற உறுதியுடன் அவரைத் தேடி மக்காவில் இருந்து புறப்பட்டோம். ஆனால், எங்களால் அவரருகில் செல்ல முடியவில்லை" என்று அவன் கூறினான்.

**ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகிறார்கள்:** ‘பெருமானார் (ஸல்) அவர்களின் மக்கத்து வாழ்க்கை ஒரு வியத்தகு முன்னுதாரணமாக உள்ளது. ஒரு வகையில் பார்க்கும்போது முழு வாழ்வுமே துன்பத்தில்தான் கழிந்தது. உஹுது போரில் அன்னார் தனியாகத்தான் இருந்தார்கள். எதிரிகளால் சூழப்பட்டிருக்கும் நிலையிலும் தம்மை அவர்கள் மறைக்கவில்லை. மாறாக தம்மைப் பற்றி அறிவிப்பு செய்து விட்டார்கள். இதனால் மக்களுக்கு அன்னாரைக் குறித்து தெரிந்து விட்டது. உஹுது போரில் ஹஸ்ரத் ரசூலுல்லாஹி (ஸல்) அவர்கள் தன்னந்தனியாக ஆகிவிட்டார்கள். பெருமானார் (ஸல்) அவர்களின் வீரம் வெளிப்பட வேண்டும் என்பதே அதில் இருந்த இரகசியமாகும். பெருமானார் (ஸல்) அவர்களோ, நான் அல்லாஹ்வின் தூதராவேன் என்று கூறியவாறு 10,000 பேருக்கு எதிரில் தன்னந்தனியாக நின்று விட்டார்கள். இதுபோன்ற முன்மாதிரியைக் காட்டுவதற்கு எந்த ஒரு நபிக்கும் சந்தர்ப்பம் கிடைக்கவில்லை!”

உஹுது போரிலோ எதிரிகளின் எண்ணிக்கை 3000 ஆக இருந்தது! மற்ற போர்களிலும் பெரும் எண்ணிக்கை கொண்டவர்களாக எதிரிகள் இருந்தார்கள். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் இரு போர்களைக் குறித்து கூறியிருக்கலாம். ஆக எவ்வாறிருப்பினும் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் நிரூபிக்க விரும்பிய விஷயம் என்னவென்றால், அது பெருமானார் (ஸல்) அவர்களின் வீரமும் முன்மாதிரியும் ஆகும். காஃபிர்களுக்கு முன்னால் தன்னந்தனியாக ஆனபோதிலும் துணிவுடன் நின்று கொண்டிருந்தார்கள்.

**பிறகு, ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகிறார்கள்:** “இறைவன் ஆற்றல் உடையவனாக இருக்கின்றான். எந்தப் பொருளில் ஆற்றலை நிரப்ப விரும்புகிறானோ அதில் நிரப்பி விடுகின்றான். ஆகவே தன்னைப் பார்ப்பதில் கிடைக்கும் ஆற்றலை அவன் தன் கலந்துரையாடலில் நிரப்பி விட்டான். நபிமார்கள் இந்தக் கலந்துரையாடல்களுக்காகத் தம் உயிரை அர்ப்பணித்து விடுகிறார்கள். உண்மையாக நேசிக்காதவர் இவ்வாறு செய்ய முடியுமா என்ன? இந்தக் கலந்துரையாடலின் காரணமாகத்தான் எந்த ஒரு நபியும் களத்தில் கால் வைத்த பிறகு பின்வாங்கியதில்லை; எந்த ஒரு நபியும் நன்றி மறந்ததில்லை!”

அதாவது (நபித்துவ) வாதம் செய்த பிறகு அந்த வாதத்தில் உறுதியாக நிற்கிறார்கள்.

உஹுது போர் சம்பவத்தைக் குறித்து மக்கள் விளக்கங்களைக் கூறியுள்ளார்கள். ஆனால் அசல் விஷயம் என்னவென்றால், அப்போது இறைவனுடைய கம்பீரமான தோற்றம் வெளிப்பட்டது. பெருமானார் (ஸல்) அவர்களைத் தவிர வேறு எவருக்கும் அதை பொறுத்துக் கொள்வதற்கு ஆற்றல் இருக்கவில்லை! ஆகவே அன்னார் அங்கேயே நின்று கொண்டிருந்தார்கள்; சஹாபிகளுடைய பாதங்கள் தடுமாறிவிட்டன.

உண்மை மற்றும் கலப்பற்ற தன்மைகளின் முன்னுதாரணங்கள் பெருமானார் (ஸல்) அவர்களுடைய வாழ்வில் காணக்கிடைப்பதைப் போன்று வேறு எங்கும் காணக் கிடைப்பதில்லை! அதேபோன்று அன்னாருடைய வாழ்வில் காணக்கிடைக்கின்ற இறை உதவிகளின் முன்னுதாரணங்களுக்கு இணையானவை வேறு எங்கும் காணக் கிடைப்பதில்லை! அவை எப்பொழுதும் அன்னாருடன் இருந்தன.

*குத்பாவின் இறுதியில் ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் சில மர்ஹூம்களின் நற்குறிப்பை எடுத்துரைத்தார்கள். முதலாவதாக, ஜமாஅத்தின் நீண்டகால தொண்டரும் ஜமாத்தினுடைய முபல்லிக்கும், டர்கிஷ் டெஸ்கின் இன்சார்ஜ் -ம் ஆகிய மதிப்பிற்குரிய Dr. ஜலால் ஷம்ஸ் சாஹிப் அவர்களின் வஃபாத்தைக் குறித்து கூறியவாறு அவர்களின் நற்குறிப்பை எடுத்துரைத்தார்கள்;* அவர்களுடைய ஜனாஸாவை நான் நேற்று தொழ வைத்து விட்டேன். அவர்களைப் பற்றிய குறிப்பைக் கூற வேண்டும் என்று நான் விரும்பினேன். அவர்கள் மிகவும் தகுதியுள்ள, திறமையுள்ள, எளிமையான, நன்றி உணர்வுள்ள, வாழ்வை அர்ப்பணித்த ஒருவராக திகழ்ந்தார்கள். ஜெர்மனி மற்றும் பிரிட்டன் ஆகியவற்றில் தொண்டாற்றும் நல்வாய்ப்பு பெற்றார்கள். 2002 ஆம் ஆண்டில் துருக்கியில் தப்லீக் செய்த குற்றத்திற்காக இரு தோழர்களுடன் கைது செய்யப்பட்டு நான்கரை மாதங்கள் இறைவழியில் சிறைவாசம் அனுபவிக்கக்கூடிய நல்வாய்ப்பையும் பெற்றார்கள்.

*இத்துடன் ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் மேற்கொண்டு மூன்று மர்ஹூம்களின் நற்குறிப்பை எடுத்துரைத்து அவர்களின் ஜனாஸா ஃகாயிப் தொழ வைப்பதாக அறிவித்தார்கள். அவர்களின் பெயர்களாவன;*

மதிப்பிற்குரிய முஹம்மது இப்ராஹீம் பாம்ப்டி சாஹிப். இவர்கள் 106 வயது வரை வாழ்ந்துள்ளார்கள். மிகவும் நேசிக்கக்கூடியவரும் அன்பு செலுத்தக்கூடியவரும் ஆவார்கள். நானும் அவர்களுக்கு மாணவனாக இருந்துள்ளேன். அவர்களுடைய கண்டிப்பில் அனுதாபமும், சீர்திருத்தமும் நோக்கமாக இருக்கும்.

*அடுத்ததாக கானாவைச் சேர்ந்த யூசுஃப் இஜாரே சாஹிப் அவர்களின் நற்குறிப்பை எடுத்துரைத்தவாறு கூறினார்கள்:* கலப்பற்ற அஹ்மதியாக இருந்தார்கள். ஜமாஅத்தின் பல்வேறு பொறுப்புகளில் இருந்துள்ளார்கள். முழுமையான முறையில் ஜமாஅத்துக்குத் தொண்டாற்றும் நல்வாய்ப்பைப் பெற்றுள்ளார்கள்.

*அடுத்ததாக, அல்ஹாஜ் உஸ்மான் பின் ஆதம் சாஹிப் அவர்களின் நற்குறிப்பை எடுத்துரைத்தார்கள்.* மர்ஹூம் அவர்கள் வஸிய்யத் அமைப்பில் இணைந்திருந்தார்கள். மிகவும் தூய அஹ்மதியாக இருந்தார்கள். ஹஜ் செய்யக்கூடிய நல்வாய்ப்பையும் பெற்றார்கள். ஃபாண்டி (Fante) மொழியில் திருக்குர்ஆனுடைய மொழியாக்கத்திலும் இவர்களுடைய பங்களிப்பு அதிகம் உள்ளது.

*ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் மர்ஹூம்களின் பாவமன்னிப்பிற்காக துஆ செய்த பிறகு அவர்களின் குழந்தைகளுக்கும் அவர்களுடைய அடிச்சுவட்டைப் பின்பற்றி நடப்பதற்கு நல்வாய்ப்பு வழங்குவானாக என்று கூறினார்கள்.*

اَلْحَمْدُ لِلّٰہِ نَحْمَدُہٗ وَنَسْتَعِیْنُہٗ وَنَسْتَغْفِرُہٗ وَنُؤْمِنُ بِہٖ وَنَتَوَکَّلُ عَلَیْہِ وَنَعُوْذُ بِاللّٰہِ مِنْ شُرُوْرِ اَنْفُسِنَا وَمِنْ سَیِّئَاتِ اَعْمَالِنَا مَنْ یَّھْدِہِ

اللّٰہُ فَلَا مُضِلَّ لَہٗ وَمَنْ یُّضْلِلْہُ فَلَا ھَادِیَ لَہٗ وَنَشْھَدُ اَنْ لَّآ اِلٰہَ اِلَّا اللّٰہُ وَنَشْھَدُ اَنَّ مُحَمَّدًا عَبْدُہٗ وَرَسُوْلُہٗ، عِبَادَ اللّٰہِ رَحِمَکُمُ اللّٰہُ اِنَّ اللّٰہَ

یَأْمُرُ بِالْعَدْلِ وَالْاِحْسَانِ وَاِیْتَآءِ ذِی الْقُرْبٰی وَیَنْھٰی عَنِ الْفَحْشَآءِ وَالْمُنْکَرِ وَالْبَغْیِ یَعِظُکُمْ لَعَلَّکُمْ تَذَکَّرُوْنَ اُذْکُرُوا اللّٰہَ یَذْکُرْکُمْ وَادْعُوْہُ

یَسْتَجِبْ لَکُمْ وَلَذِکْرُ اللّٰہِ اَکْبَرُ۔

**(தமிழாக்கம்: மவ்லவி A.P.A. தாரிக் அஹமது)**